குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | கணேசன் த–பெ தில்லைகோவிந்தன் | நாள்:14.09.2022 |
| வயது | | PW 4 |
| தொழில் | | CC:111/2018 |
| காவல் நிலையம் | | Cr.No.95/2018 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 14.09.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடுவங்கரையில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. யார் யாரை அடித்தார்கள் என்ற எந்த விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது**

எதிரி குபேந்திரன் எனது ஊர்க்காரர்தான். அவர் பிள்ளைமார் தெருவில் வசித்து வருகிறார். எதிரி திருமணம் செய்து எங்கள் ஊரில் வந்து நிரந்தரமாக குடியிருந்து வருகிறார். பல வருடங்களாக எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 தியாகராஜனையும் எனக்கு தெரியும். அவரும் எங்கள் ஊர்க்காரர் தான். ஆஜர் எதிரிக்கும் அ.சா.1–க்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. முன்விரோதம் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.06.2018 அன்று இரவு 10.30 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சார்ந்த முனுசாமி என்பவரும் அ.சா.1 தியாகராஜன் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது தியாகராஜனும் எதிரியும் மனை சம்பந்தமான பிரச்சனை சம்பந்தமான ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டிருந்ததாகவும் எதிரி அ.சா.1யை ஆபசமான வார்த்தைகளால் திட்டியதாகவும் மேலும் அ.சா.1யை எதிரி நெட்டி தள்ளியதாகவும் அதில் அ.சா.1–க்கு தலையில் அடிப்பட்டதாகவும் எதிரி அ.சா.1–க்கு கொலை மிரட்டல் விடுத்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு ஆஜர் எதிரி என் ஊர்க்காரர் என்பதாலும் எனக்கு தெரிந்தவர் என்ற காரணத்தினாலும் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/- Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram